தந்து, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணியும் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

சிற்றுந்துகள்

***14337—முனைவர் த. இனிகோ இருதயராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி, இருதயபுரம், எடத்தெரு மற்றும் எஸ்.எஸ். நகர் ஆகிய பகுதிகளுக்கு சிற்றுந்துகள் இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதிக்குட்பட்ட இருதயபுரம், எடத்தெரு மற்றும் எஸ்.எஸ். நகர் ஆகிய பகுதிகளுக்கு சிற்றுந்து இயக்குகின்ற திட்டம் அரசின் வசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட, மக்கள் அடர்த்தியாக வாழக்கூடிய பகுதிகளான இருதயபுரம், எடத்தெரு, எஸ்.எஸ். நகர் பகுதிகளில் கொரோனா காலத்திற்கு முன்பாக 52, 32A என்கின்ற அரசு பேருந்துகளும், 52A என்கின்ற தனியார் பேருந்தும் காலை 8–10, 8–20, நண்பகல் 12–00, மாலை 4–00, 4–30 என்ற அளவிலே குறிப்பாக பள்ளி மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்வதற்கு வசதியாக இயக்கப்பட்டன. தற்போது அவை நிறுத்தப்பட்டுள்ளன. அதனை மீண்டும் இயக்க வேண்டுமென்ற கோரிக்கை நாளுக்குநாள் வலுத்து வருகிறது. எனவே, இதனை மீண்டும் இயக்க அரசு முன்வர வேண்டுமென்று தங்களின்

2023 ஏப்ரல் 10]

வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் உறுப்பினர் கேட்டது சிற்றுந்துகள் இயக்கப்படுமா என்பது. தற்போது அவர் கேட்டிருக்கின்ற கேள்வி, ஏற்கெனவே நிறுத்தப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க வேண்டுமென்பது. இயக்கப்பட்ட பேருந்துகளில் எந்தெந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டன என்ற குறிப்பை அவர் கொடுத்தால், மீண்டும் அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் சிற்றுந்தாகத்தான் இயக்கப்பட்டது. அதன்பிறகு 52*A *என்கின்ற பெரிய பேருந்தும், அரசு பேருந்தும் விடுவிக்கப்பட்டது. அதேபோல, திருச்சி மாநகரில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால், நேரடியாகப் போக்குவரத்து வசதிகள் இல்லை. கீழபுலிவார் ரோடு, காந்தி மார்க்கெட்,* E.B. Road *போன்ற பகுதிகளிலிருந்து அரசு மருத்துவமனை,* Collector office, *உறையூர் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்றால், மத்திய பேருந்து நிலையம் அல்லது சத்திரம்* bus stand*-க்கு வந்து, அங்கிருந்து இன்னொரு பேருந்தின் வழியாகத்தான் அந்தப் பகுதிகளுக்குச் செல்ல முடிகிறது. எனவே, திருச்சிக்கு அருகேயுள்ள அரியலூரைச் சார்ந்த மாவட்ட அமைச்சர் அவர்கள், திருச்சியைப் பற்றி நன்கு அறிவார் என்று நினைக்கின்றேன். எனவே, நான் சொல்கின்ற பகுதிகளை இணைக்கின்றவண்ணம், வட்டப் பேருந்து சேவை தொடங்கிட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2023 ஏப்ரல் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி, திருச்சியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே மாண்புமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, பல்வேறு புதிய வழித்தடங்கள் அங்கே இயக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால்,* trailer buses *எல்லாம் விடப்பட்டு, திருச்சிக்குப் பெருமை சேர்த்தவர் அண்ணன் அவர்கள். அவர் குறிப்பிடுகின்ற பகுதிகள் வெவ்வேறு பகுதிகளாக திருச்சியில் இருக்கின்றவை. அந்தப் பகுதிகளை இணைக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் அவர் வைக்கின்ற கோரிக்கையையேற்று விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

130—

திருக்கோயிலைப் புனரமைத்தல்

***15239—திரு. ம. பிரபாகரன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, ஆலத்தூர் ஊராட்சி, செட்டிகுளம் கிராமத்தில் உள்ள அருள்மிகு பெருமாள் திருக்கோயிலைப் புனரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*